பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

05 10 2026 06 45

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடியும், ஸ்விட்சர்லாந்து அதிபர் திரு. Guy Parmelinனும் புதுதில்லியில் இன்று இருதரப்பு பேச்சுகளை நடத்த உள்ளனர்.

2. அரசியலமைப்பு சட்டத்தால் உருவாக்கப்பட்ட அமைப்புகளை காங்கிரஸ் கட்சி தொடர்ந்து அவமதித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ குற்றம் சாட்டியுள்ளார்.

3. மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிகளில் பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் வினியோகத்தை தடுக்க கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

4. அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இரண்டாம் பருவ பாடப்புத்தகங்கள் இன்று முதல் விநியோகிக்கப்பட உள்ளன.

5. இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான 2-வது இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்க உள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<><><><><>

தேர்தல் ஆணையம் உள்ளிட்ட அரசியலமைப்பு சட்டத்தால் உருவாக்கப்பட்ட அமைப்புகளை காங்கிரஸ் கட்சி தொடர்ந்து அவமதித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில் தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் மற்றும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் சட்டவிரோதமானவை என்று காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜூன் கார்கே கூறியுள்ளதை அடுத்து இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தேர்தல் ஆணையத்தால் தேர்தல் நடத்தப்பட்டு மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு எதிர்க்கட்சித் தலைவராக செயல்பட்டுவரும் திரு. ராகுல் காந்தியும் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் தேர்தல் மூலம் சட்டமன்ற உறுப்பினராகி முதலமைச்சர்களாக செயல்படும் அனைவரும் சட்டவிரோதமானவர்களா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டின் அரசியலமைப்பை தொடர்ந்து அவமதிப்பதை காங்கிரஸ் கட்சி நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும், திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

<><><><><>

மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் நேற்றுடன் முடிவடைந்ததையடுத்து, தங்கும்விடுதிகள், திருமண மண்டபங்களில் காவல்துறையினர் சோதனை நடத்தினர்.

தொகுதியை சாராத வெளிநபர்கள் உடனடியாக அங்கிருந்து செல்ல வேண்டும் என்று காவல்துறையினர் அறிவுறுத்தினர்.

நேற்று மாலை முதல் இந்த இரு தொகுதிகளிலும் வாக்காளர்களுக்கு பணம் அல்லது பரிசுப்பொருட்கள் தருவதை தடுக்க கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இந்நிலையில், மதுராந்தகம் தொகுதியில் இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவிற்கு 285 வாக்குச்சாவடி மையங்களும், தாராபுரம் தொகுதியில் 320 வாக்குச்சாவடி மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த மையங்களில் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகள் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

நாளை வாக்குப்பதிவையொட்டி இந்த இரண்டு தொகுதிகளிலும் உள்ளூர் விடுமுறை விடப்பட்டுள்ளது.

<><><><><>

தமிழகத்தில் காலாண்டுத் தேர்வு விடுமுறை முடிந்து பள்ளிகள் இன்று திறக்கப்படுகின்றன.

கடந்தமாதம் 25 ஆம் தேதி காலாண்டுத் தேர்வு நிறைவடைந்த தையடுத்து, 26 ஆம் தேதி முதல் நேற்று வரை பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது.

இந்நிலையில், மாநிலத்தில் அரசு மற்றும் அரசு உதவிபெறம் பள்ளிகள் அனைத்தும் விடுமுறைக்கு பின்னர் இன்று திறக்கப்படுகின்றன.

1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இரண்டாம் பருவ பாடப்புத்தகங்கள் இன்று முதல் வழங்கப்பட உள்ளன.

இடைத்தேர்தல் நடைபெற உள்ள மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதிகளுக்கு உட்பட்ட அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளிகள் நாளை மறுநாள் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

-----------

நாடு முழுவதும் பயன்பாட்டில் உள்ள டீசலில் இயங்கும் மின்சார ரயில்களை திரவ எரிவாயுவில் இயங்கும் வகையில் படிப்படியாக மாற்ற ரயில்வே திட்டமிட்டுள்ளது.

இதற்காக டீசல் மற்றும் மின்சாரம் மூலம் இயங்கும் ரயில்களில் மாற்றங்கள் செய்யப்பட்டு இரட்டை எரிபொருளில் இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு வருகின்றன.

நாட்டில் பெரும்பாலான ரயில்கள் மின்சார என்ஜின்கள் மூலம் இயக்கப்படுகின்றன.

மின்மயமாக்கப்படாத வழித்தடங்கள் மற்றும் டீசல் என்ஜின்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இதனால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசுவை குறைக்கும் வகையில் டீசல் என்ஜின்களை முற்றிலுமாக குறைத்து திரவ எரிவாயு மற்றும் மின்சாரத்தின் மூலம் என்ஜின்களை இயக்க ரயில்வே திட்டமிட்டுள்ளது.

----------

மன்னார் வளைகுடா மற்றும் அதனையொட்டிய தென்தமிழக கடலோரப் பகுதிகளில் வளிமண்டல சுழற்சி நிலவுவதால், கோவை நீலகிரி, தேனி, கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களில் இன்று இடி, மின்னலுடன் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

திருப்பூர், ஈரோடு, சேலம், நாமக்கல், திருவண்ணாமலை, விழுப்புரம் உள்ளிட்ட 27 மாவட்டங்களிலும் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் ஒருசில இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் மிதமான மழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தின் ஏனைய பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை மையம் கூறியுள்ளது.

சென்னையை பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒருசில பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யும் என்றும் வானிலை மையம் கூறியுள்ளது.

<><><><><>

பாலஸ்தீனத்தின் காஸா திட்டுப்பகுதியில் இஸ்ரேல் பாதுகாப்புப்படை நேற்று நடத்திய தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் கமாண்டர் உயிரிழந்தார்.

----------

ரஷ்யாவுடன் முத்தரப்பு பேச்சு நடத்தலாம் என்ற அமெரிக்காவின் யோசனையை வரவேற்பதாக யுக்ரைன் அதிபர் திரு. Volodymyr Zelenskyy தெரிவித்துள்ளார்.

----------

ஆப்கானிஸ்தானில் இன்று அதிகாலை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 4 புள்ளி 9 ஆக பதிவாகியுள்ளது.

----------

மூத்தகுடிமக்கள் நலனுக்காக புதிய சட்டவரைவு இம்மாதம் கேரள சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. Satheesan தெரிவித்துள்ளார்.

--------

தூத்துக்குடி மாநகரப் பகுதிகளில் ஆயுதங்களுடன் இரு சக்கர வாகனங்களில் சுற்றியபடி சமூகவலைதளத்தில் வீடியோ வெளியிட்ட இரண்டு இளைஞர்களை காவல்துறையினர் கைது செய்தனர்.

------------

பெரம்பலூர் மாவட்டம் நெய்க்குப்பை கிராமத்தில் வரும் 14 ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் திரு. அப்துல் ராஷித் தலைமையில் மக்கள் தொடர்பு முகாம் நடைபெற உள்ளதாக மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

-----------

மதுரை மாவட்டம் மேலூரில் பண இரட்டிப்பு மோசடி வழக்கில் கைது செய்யப்பட்ட 2 பேர் மீது குண்டர் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

--------

திருநெல்வேலி மாவட்டம் வன்னிகோனந்தல் பகுதியில் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை விற்பனை செய்த கடைக்கு உணவுப் பாதுகாப்புப் துறையினர் சீல் வைத்து அபராதம் விதித்தனர்.

------------

வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கையாக சென்னை நுங்கம்பாக்கம் கால்வாயில் மேற்கொள்ளப்பட்டுவரும் தூர்வாரும் பணிகளை மாநகராட்சி ஆணையர் திரு. சமீரன் நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

------------

சென்னை வள்ளுவர்கோட்டம் பகுதியில் ஆபத்தான முறையில் இருசக்கர வாகனங்களை ஓட்டி, சாகசத்தில் ஈடுபட்ட 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக சென்னை மாநகர காவல்துறை தெரிவித்துள்ளது.

-----------

ஆசிய விளையாட்டுப் போட்டியில் சிறப்பான சாதனை படைத்த இந்திய அணியினருக்கு குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து குடியரசுத் தலைவர் விடுத்துள்ள சமூகவலைதள பதிவில், நமது வீர்களின் கடின உழைப்பு, திறன் மற்றும் விடாமுயற்சி ஆகியவை நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளதாக கூறியுள்ளார்.

ஜப்பானில் நேற்று நிறைவடைந்த இந்த போட்டியில் 21 தங்கம் உள்ளிட்ட 85 பதக்கங்களை இந்திய அணி வென்றிருப்பது திறமைகளுக்கு சாட்சியாக அமைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட்ட இந்திய குழுவினர் அனைவரையும் நினைத்து நாடே பெருமிதம் கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அனைத்து வீரர் மற்றும் வீராங்கனைகள் தொடர்ந்து பல சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறவும், பல சாதனைகளை படைக்கவும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாகவும் குடியரசுத் தலைவர் கூறியுள்ளார்.

<><><><><><>